# அரசு பொறியியல் கல்லூரியில் மாணவர் சேர்க்கை



திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாணவர் சேர்க்கையில் பங்கேற்றோர்.

**திருநெல்வேலி, ஆக. 8:** திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரியில் 2ஆவது நாளாக செவ்வாய்க்கிழமை மாணவர் சேர்க்கை நடைபெற்றது.

அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பொறியியல் கலந்தாய்வில் பங்கேற்று திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரியை தேர்வு செய்த மாணவர்களுக்கான மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. இக்கல்லூரியிலுள்ள 420 இடங்களுக்கு மாணவர் சேர்க்கை திங்கள்கிழமை தொடங்கியது. 2ஆவது நாளாக செவ்வாய்க்கிழமையும் நடைபெற்றது. பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர், மாணவிகள் பங்கேற்றனர்.

பாடப்பிரிவு வாரியான மாணவர் சேர்க்கை புதன்கிழமை நிறைவு பெறுகிறது. இதையடுத்து முதலாமாண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் இம்மாதம் 21ஆம் தேதி தொடங்குகிறது என கல்லூரி முதல்வர் (பொ) இந்திராஹெப்சிடேவிட் தெரிவித்தார்.

# நெல்லை அரசு இன்ஜி., கல்லூரியில் மாணவர்கள் சேர்க்கை துவங்கியது

திருநெல்வேலி, ஆக. 9—

நெல்லை அரசு இன்ஜினியரிங் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்கள் சேர்க்கை துவங்கியது.

தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் இன்ஜினியரிங் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான கவுன்சிலிங் சென்னை அண்ணா பல்கலை.யில் நடந்தது.

நெல்லை அரசு இன்ஜினியரிங் கல்லூரிகளை தேர்ந்தெடுத்த மாணவ, மாணவிகளுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு நேற்று முன்தினம் துவங்கியது. இரண்டாவது நாளான நேற்று ஏராளமான மாணவ, மாணவிகள் சான்றிதழ்களை கல்லூரியில் சமர்ப்பித்தனர். சான்றிதழ் சரிபார்ப்பு பணியை தொடர்ந்து மாணவர்கள் சேர்க்கையும் நடந்தது. இன்றும் (9ம் தேதி) சான்றிதழ் சரிபார்க்கும் பணி நடக்கிறது.

முதலாமாண்டு மாணவ, மாணவிகளுக்கான வகுப்புகள் வரும் 21ம் தேதி துவங்குகிறது என முதல்வர் (பொறுப்பு) இந்திரா கெட்சி டேவிட் தெரிவித்தார்.



நெல்லை அரசு இன்ஜினியரிங் கல்லூரியில் முதலாமாண்டு மாணவ, மாணவிகளுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு பணி நடந்தது.




நெல்லை அரசு பொறியியல் கல்லூரியில் முதலாமாண்டு பொறியியல் படிப்பிற்கான மாணவர் சேர்க்கை கல் முதல்வர் டாக்டர் இந்திரா ஹெட்சி டேவிட் தலைமையில் நடந்த போது எடுத்த படம்.